**நுவரஎலிய பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**
-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்
-----------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 20 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நுவரெலிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
-------------------------------------------------------------------

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்
---------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் 04 கணக்கு மீதிகளின் பெறுமதி அக்கணக்கு மீதிகளுக்குரிய பட்டோலைகளுடன் ஒப்பிட்ட போது ரூபா 764,203,103 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

#### 1.3.3 தொங்கல் கணக்குகள்
--------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 67,129,754 ஆக இருந்ததுடன், அம்மீதி 2014 ஆம் ஆண்டு முதல் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 4 ஆண்டு காலம் கடந்துள்ள பெறவேண்டிய வைைக் கட்டணங்கள் ரூபா 487,574 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 18,109,956 ஆன 02 கணக்கு விடயங்களின் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) மற்றும் (ஆ) பிரிவுகள், 159(1) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறுஇன் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,605,598 தொகையான நிலுவை வருமானம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) | ஏதெனும் செயற்பாடொன்றிற்காக வழங்கப்பட்ட கட்டுநிதி அச்செயற்பாடு முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2009 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் 34 சந்தர்ப்பங்களில் வெவ்வேறு செயற் பாடுகளுக்கு சபை உத்தியோகத்தர்களுக்கும் வெளித் தரப்பினருக்கும் வழங்கியிருந்த ரூபா 18,586,147 ஆன கட்டுநிதி 2017 யூலை 28 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 4.3.3 ஆம் பிரிவு | சபையின் இல்லங்களை உத்தியோகத்தர் களுக்கு / அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்குரிய காத்திருக்கும் பட்டியலொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1988 இன் மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் மதிபீடொன்று, 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபை 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்களை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,575,088 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,862,805 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 15,287,717 தொகையான பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 15,287,717 தொகை பின்னடைவிற்கு வருமான விடயமொன்றில் குறைவும் 05 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நடைமுறை விகிதங்கள் 2:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

சபையின் நெனபியச பிரிவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அதானிக்கப்பட்டன.

(அ) நெனபியச பிரிவினை பராமரித்துச் செல்வதற்காக 3 கணனிகள் உட்பட ஏனைய பொருட்கள் மாகாண சபையிடமிருந்து 2014 யூன் 13 ஆந் திகதி பிரதேச சபைக்கு கிடைத்திருந்த போதிலும் அதில் ஒரு கணனி 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதிவரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய பொருட்கள் பிரதேச சபையினதும் நூலகத்தினதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நெனபியச பிரிவிற்காக கட்டிடமொன்றை அமைப்பதற்கு ரூபா 594,519 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அக்கட்டிடத்தையும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது.

## 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

01 - 09 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கில்களும் உழவு இயந்திரமொன்றும் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கையகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கந்தபொல நகரிலும் சுற்றுபுற பிரதேசங்களில் நாளாந்தம் எடுத்துச் செல்லப்படும் கலப்பு பசளை நுவரெலிய – ராகல பிரதான வீதி அருகில் திறந்த பூமியில் முறையற்ற விதத்தில் இடப்பட்டு வந்தன.

(ஆ) நானுஓயா பிரதேசத்தில் கழிவுகள் வகைப்படுத்தப்படாமல் சேரிக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 20 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன்,

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிட்ட செய்யும் போது 06 வருமான விடயங்களில் 26 சதவீதம் முதல் 387 சதவீதம் வரையும் 06 செலவு விடயங்களில் 17 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | சபைக்கு பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்யாமை. |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சபைக்குரிய சொத்துக்கள் முறையாக பராமரிக்கப்படாமை |
| (ஈ) கணக்கீடு | கணக்காண்டிற்குரிய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கணக்கீடு செய்யும் போது பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை. |